செய்திவெளியீடு எண் : 469 நாள் : 16.09.2014

**பத்திரிகைச் செய்தி**

சிறுபான்மையின மாணவ – மாணவியர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கால வரம்பு நீட்டிப்பு.

தமிழ்நாட்டில் வாழும் மதவழி சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க மைய அரசால் 30.9.2014 வரை காலவரம்பு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே இதுவரை பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்காத தகுதிவாய்ந்த சிறுபான்மையின மாணவ/மாணவியர்கள் இந்த அரிய வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தி www.momascholarship.gov.in என்ற இணையதளத்தில் online மூலம் விண்ணப்பித்து கல்வி நிலையங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/– அ. முகமது அஸ்லம்
சிறுபான்மையினர் நல ஆணையர்

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
சென்னை - 9